STC NO.560/2021 Date:24.08.2022

ம.சா.2 - **கண்ணன்**

**<u>குறுக்கு விசாரணை-</u>**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் 7 லாரிகள் சொந்தமாக வைத்து வாடகைக்கு விட்டு தொழில் செய்து வருகிறேன். பரிமளாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் துாரத்து உறவினர். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரும் எனக்கு உறவினர் ஆவார். 29-10-2020 ல் பரிமளா வீட்டிற்கு சென்றதாக கூறியுள்ள நிலையில் அங்கு எதற்கு சென்றேன் என்றால் திருச்செங்கோடு அருகே மோனமங்கலத்தில் உள்ள முனியப்பன் கோவில் விழா இருப்பது சம்பந்தமாக பரிமளாவை அழைப்பதற்கு சென்றேன். அவர் வீட்டிற்கு செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை சுமார் 11.00 மணி இருக்கும். நான் போகும் போது எதிரி அங்கு இருந்தாரா என்றால் நான் போன பிறகு தான் வந்தார்.

2) அதன்பிறகு அங்கு என்ன நடந்தது என்றால் எதிரி பெரியண்ணன் தனக்கு காம்பவுண்ட் சுவர் எழுப்புவதற்கு ரூ.5 லட்சம் பணம் தேவைப்படுவதாகவும், அதனை 2 மாதத்தில் கொடுத்துவிடுவதாகவும் பரிமளாவிடம் கேட்டார். பணம் உடனே கொடுத்தாரா என்றால் அப்போதே பரிமளா ரூ.50,000/- கட்டாக மொத்தம் 10 கட்டு கொடுத்தார். மேற்படி, தொகையை எண்ணி பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி, சங்கதிகளை முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எதிரி பணம் வாங்கி சென்றாரா என்றால் ஆமாம். அதன்பிறகு நான் அங்கு எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் 2 மணி நேரம் இருந்தேன். 2 மாதத்தில் கொடுத்துவிடுவதாக கூறிசென்றுவிட்டாரா என்றால் ஆமாம், ஒரு காசோலையையும் கொடுத்துசென்றார்.

3) மேற்படி, காசோலையை நான் பார்த்தேனா என்றால் 29-12-2020 தேதியிட்டு ஐசிஐசிஐ வங்கி காசோலை கொடுத்தார். காசோலையை தமிழில் பூர்த்தி செய்து தந்தாரா அல்லது ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து தந்தாரா என்றால் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து தந்தார். காசோலையின் இருபுறமும் எதிரி கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. அதன்பிறகு எதிரி பணம் திருப்பி கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 2 மாதத்திற்கு முன்பு புகார்தாரர் என்னை சாட்சி

சொல்ல அழைத்தபோது தான் தெரியும்.

4) 29-10-2020 ம் தேதியில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் நான் சொல்வது போல் அன்றைய தினம் பரிமளா வீட்டிற்கு சென்றிருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று அந்த காலக்கட்டங்களில் கோவில் திருவிழாக்கள் நடத்தக்கூடாது என அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், அதனால் நான் சொல்வதுபோல் கோவில் திருவிழா இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி பெரியண்ணன் புகார்தாரர் பரிமளாவிடம் இருந்து வாங்கிய பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்றும், எதிரி கொடுத்த காசோலையை திருப்பி கேட்டதால் புகார்தாரர் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. புகார்தாரரின் கணவரும், நானும் பைனான்ஸ் தொழில் செய்து வருவதால் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- Kannan

Sd/- S.R.Babu 24.08.2022,
Judicial Magistrate No.1, Sankari.